செ.வெ.எண். 47/அக்டோபர் தேதி : 22.10.2016

<u>தருமபுரி மாவட்டம்</u>

## அரூர் வட்டம், ஈச்சம்பாடி கிராமத்தில் 100 நாள் வேலை வாய்ப்புத்திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அரசின் நலத்திட்டங்களை விளக்குவது தொடர்பான கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஈச்சம்பாடி கிராமத்தில் மகாத்மாகாந்தி ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் 100 நாள் திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களிடம் அரசின் நலத்திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :-

100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து கொண்டு சேர்ப்பதே இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கல்வியறிவு குறைவாக பெற்றவர்கள், ஏழ்மை நிலை கொண்டவர்கள், குறிப்பாக பெண்கள் பெரும்பாலானோர் இத்திட்டத்தில் பணிபுரிகிறார்கள். இவர்களுக்கு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் எவையெவை என்பது குறித்தும் அவற்றை எப்படி பெறுவது என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த கூட்டம் நடத்தப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பொது இ-சேவை மையத்தின் மூலம் வழங்கப்படும் வருமானச்சான்றிதழ், சாதி சான்றிதழ், படிப்புச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை, கணவனால் கை விடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ், அசையும் மற்றும் அசையா சொத்து சான்றிதழ், இணையதள பட்டா மாற்றம், இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பத்திரங்களில் ஆவணங்களில் கிரையம் கொடுத்தவர்கள் மற்றும் வாங்கியவர்கள் விவரம் அடங்கிய பக்கங்கள், சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் மற்றும் கைரேகையை காட்டும் பின்புற பக்கங்கள், ஆவணத்தில் உள்ள தபசில் சொத்து விவர பக்கங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம்.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திட்ட உதவித்தொகையாக திருமண உதவித்தொகை ஆண்களுக்கு ரூ. 8 ஆயிரமும், பெண்களுக்கு ரூ. 10 ஆயிரமும் பெறுவதற்கு திருமணத்திற்கு முன்பு 3 மாத காலத்திற்குள் அல்லது திருமணத்திற்கு பின்பு 6 மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு தொகையாக ஆண்களுக்கு ரூ. 12 ஆயிரத்து 500/-ம், பெண்களுக்கு ரூ. 12 ஆயிரத்து 500/-ம், விபத்து ஏற்பட்ட 6 மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு தொகையாக ஆண்களுக்கு ரூ. 1 இலட்சத்து 2 ஆயிரத்து 500/-ம், பெண்களுக்கு ரூ. 12 ஆயிரத்து 500/-ம், முடியாத அளவிற்கு இழப்பு இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு மீட்க முடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தலின் குறைபாட்டிற்காக ஆண்களுக்கு ரூ. 1 இலட்சமும், பெண்களுக்கு ரூ. 1 இலட்சமும், முடியாத அளவிற்கு இழப்பு ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது பக்கவாதம் ஆகிய குறைபாட்டிற்காக ஆண்களுக்கு ரூ. 50 ஆயிரமும், பெண்களுக்கு ரூ. 50 ஆயிரமும், கடுமையான காயங்கள் காரணமாக கை, கால் இழத்தல் ஆண்களுக்கு ரூ. 20 ஆயிரமும், பெண்களுக்கு ரூ. 20 ஆயிரமும் விபத்து ஏற்பட்ட 6 மாத காலத்திற்குள் மனு அளிக்கலாம். தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகை (காசநோய், புற்றுநோய், இதய நோய், நரம்பியல் நோய், கை மற்றும் கால் எழும்பு முறிவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு

மாதாந்திரம் ரூ. 1000/-மும், பெண்களுக்கு மாதாந்திரம் ரூ. 1000/-மும். இத்தொகையை பெறுவதற்கு மனு அளிக்க கால அவகாசம் இல்லை என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மீ. செல்வகுமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. பெ. சதீஸ், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. வெங்கடேஷ், செயற்பொறியாளர் செல்வி. சுமதி, மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.